வேண்டாம், வெளியில் சொல்லாதீர், வெட்கக்கேடு!

Phone No. 4502

விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458

[இலங்கை 10 சதம்]

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (26—11—49) வெளியீடு (27—11—49) [இதழ் 101

ஊக்கம்-உதவி வேண்டாம்; ஊறு விளைக்காதிருப்பீரா ?

சீர்திருத்த இயக்கத்தைச் சிதைக்கும் சர்க்கார் ஜாதி யொழிக்கும் சர்க்காராம் !

'வர்ணாஸ்ரம'த்தைத் தடை செய்வோர் வருண பேதத்தைக் களைபவரா ?

"ஜாதிவேறுபாடுகள் மறையவேண்டுமென்பதுதான் சர்க்கார் நோக்கம் என்று கூறப்படுகிறது. இன்றைய ஜாதிமுறை மனுநீதியின்மீதே எழுப்பப்பட்டிருக்கிறது. மனுநீதிக்குமாறாக செல்ல விரும்புகிறதா சர்க்கார் என்று கேட்கிறேன்" என்பதாக சென்னை சட்டசபையில் 22-ந் தேதியன்று தோழர் எம். எஸ். ஏ. மஜீத் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த மந்திரி தோழர் பி. கோபால்ரெட்டி குறிப்பிட்டதாவது:-

"மக்களுக்குகந்ததை மக்கள் தாமே முடிவு செய்துகொள்ள வேண்டும். சர்க்கார் நடவடிக்கை இதற்குத் தேவையில்லை. மனுநீதியைப் பின்பற்ற மக்களுக்கு விருப்பமில்லையானால், அதை அவர்கள் விட்டுவிடலாம். சர்க்கார் அவர்களின் விருப்பத்தைக் குலைக்காது."

மந்திரி கொடுத்திருக்கும் பதிலைப் பொறுத்த அளவில்- அகன் சொல்லமைப்பைப் பொறுத்த அளவில் ஜனநாயகம் கொழுந்துவிட்டு எரியவே செய்கிறது. ஜாதிவேறுபாடுகளும் அவற்றின் வழி எழும் வெறித் தன்மைகளும் பூண்டோடு தகர்க்கப்பெறவேண்டுமென்ற நல்லெண்ணம்படைத்தோர்க்கு, மந்திரியாரின்பதில், நம்பிக்கையும் உற்சாகமும் ஊட்டக்கூடியதாகத்தானிருக்கிறது. ஜாதியொழிப்புத் திட்டத்தில், மனுதர்மத்தையும் பலியிடத் துணிந்துவிட்டதே சர்க்காரென்று, முன்னேற்றச சக்திகளும் பூரிக்கும்வகையில் அமைந்துதானிருக்கிறது மந்திரியாரின் பதில்!

சட்டசபையில், சர்க்கார் தந்திருக்கும் இப்பதிலுக்கும், மக்கள் மன்றத்தில், அவர்கள் மேற்கொள்ளும் போக்குக்கும் 'மலைக்கும் மடுவுக்கு'மான வேறுபாடு இருக்கிறதேயென்பதைக் காணும் போதுதான், பொறுப்புள்ளோருக்கு உள்ளபடியே மனக்கலக்க மேற்படுகிறது. ஜாதிமுறை அகல வேண்டுமென்பதையும், அது கிளப்பிவிடும் அகங்கார ஆணவ வெறி ஒழிய வேண்டுமென்பதையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாக சர்க்கார் குறிப்பிடுகின்றனர். மனுநீதிக்கு மாறாக மக்கள் போயினும் சம்மதமே என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். நாட்டு நிலையுணர்ந்த நாகரிகமான சர்க்கார் மேற்கொள்ள வேண்டிய முடிவுதானிது. பாராட்டுகிறோம் ஆனால், தங்கள் முடிவுக்கேற்ப ஒரு சிறு துரும்பளவுக்காவது நடந்து கொள்கின்றனராவென்று கேட்கிறோம்.

இந்திய உபகண்டத்து இத்தென்பகுதிமக்கள், அரசாண்ட பரம்பரையைச் சேர்ந்த நனிநாகரிக மக்கள். உலகத்தின் ஏனைய பகுதிகளிலெல்லாம் மக்கள் சமுதாயம் தழையாடையுடுத்து குன்றுகுகைகளில் வதிந்த காலத்திலேயே அறிவுந்திறனும் முன்னேற்றமுமிக்குத்திகழ்ந்த மக்கள், இன்று எடுப்பார்க்கைப் பிள்ளைகளாய் ஏக்கமும் துக்கமும் நிறைந்து, அவல வாழ்வு நடத்துவதற்கு அடிப்படையான காரணம்! அவர்கள் சமுதாயவாழ்வில் இடையில புகுந்து விட்ட ஆரிய நச்சரவு வர்ணாஸ்ரமக் கொள்கைகளே தாமென்பதை,யாரும் மறுக்க முடியாது திறந்த மனநிலையில், தாட்சண்யம், தயை, பய

[தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க]

இந்தியாவில் அயல் நாட்டு முதலீடுகள்

'கம்பெனி' பரம்பரை முந்துகிறது!

இந்தியாவில் தொழில்வியாபாரங்களில் முதலீடு செய்ய வெளிநாட்டு முதலாளிகளிடமிருந்து நாள்தோறும் அதிகப்படியான விண்ணப்பங்கள் இந்திய சர்க்காருக்கு வந்து சேர்ந்த வண்ணமிருக்கின்றன வென்று கூறப்படுகிறது. இவ்வெளிநாட்டு வியாபாரிகளில் பலரும் இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து, பங்காளிகளாகவே தொழில் நடத்தப் பிரியப்படுகின்றனராம். வெளிநாட்டான் இங்கு முதலீடு செய்வதைப் பொறுத்து இந்தியாவின் தொழிற் கொள்கையென்ன வென்பதுபற்றி பிரதம மந்திரி பண்டித நேரு கடந்த ஏப்ரலில் சட்டசபையில் பேசியதிலிருந்து இதுவரை 59 விண்ணப்பங்கள் வந்துள்ளன வென்றும், அவற்றின் 37-க்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறதென்றும் கூறப்படுகிறது. இது போன்றவிண்ணப்பங்கள் 29-க்குக் கடந்த வாண்டு அனுமதியளிக்கப்பட்டிருக்கும் 66 விண்ணப்பங்கள் மூலம், ரூ. 22 கோடி முதலீடு செய்ய வகையேற்படுகிறதென்றும், இதில் வெளிநாட்டாரின் மூலதனம் ரூ. 62 கோடி யென்றும் தெரிகிறது.

இப்படி வந்து அனுமதிப் பெற்றிருக்கும் விண்ணப்பங்களுள்பெரும்பாலானவை பிரிட்டனிலிருந்து வந்தவையென கூறப்படுகிறது மோட்டார்கள், ரசாயனப்பொருள்கள், மருந்துகள், பிலிம்கள், என்ஜினியரிங்பொருள்கள், தோல், தாள், நெசவு யந்திரம், அச்சுமை முதலியவை தயாரிப்புக்கான தொழிற்சாலைகள், இம்முதலீடுகொண்டு துவக்கப்படலாமெனத் தெரிகிறது

தாய்மொழிக்கு முதலிடம் தரும் சர்க்கார் 'யோக்யதை' அம்பலம்!

—(0)—

வடவர் மொழியை வலிய திணிக்கும் 'வக்ரபுத்தி!'

சென்னை சர்க்காரின் அரசாங்க முத்திரையில் இனிமேல் 'சத்யமேவ ஜெயத்தே' என்ற சொற்றொடரும் பொறிக்கப்படுமெனத் தெரிகிறது. சர்க்கார் சாமான்கள், சீல்கள் அனைத்திலும் இத்தொடர் ஒருவகை வகைப் பொறிக்கப்படுமாம்.

மதச் சார்பற்ற சர்க்காரென்று பீற்றிக்கொண்டு, இந்துமதத்தின் சின்னமாகிய கோபுரத்தையே தங்கள் அடையாளமாக கொண்ட சர்க்காரிடமிருந்து, தமிழ்மாபுக்குகந்தான குறிக்கோள் சொற்றொடரை எதிர்பார்த்தால் ஏமாந்துதான் போவோம். 'சத்யமே ஜயம்' என்ற கருத்தில் தமிழ்மொழியில், தூய தமிழில் வேறு தொடர்களில்லையாவெனக் கேட்கிறோம். தாய்மொழிக்கு முதலிடம் கொடுக்கும் சர்க்காரின் 'வண்டவாளம்' இதுதானா? தமிழ்நாட்டில், தமிழர் மத்தியில், தமிழருக்காக நடைபெறுவதாகக் கூறப்படும் ஒரு சர்க்காரின் முத்திரையில் பொறிக்கப்படும் சொற்றொடர் தமிழ்க்குழுமொழிகளுக்குகந்ததாக இருக்க வேண்டாமா? இந்தச் சாதாரண அறிவைப் பயன்படுத்தவேண்டிய வேலையைக்கூட மேற்கொள்ள முடியாது போய்விட்டதா சர்க்காருக்கு என்று கேட்கிறோம்.

'உணவு உயர்வு தரும்', 'உண்மை விரும்பு' போன்ற தனித் தமிழ்ச் சொற்றொடர்களைப் பயன்படுத்தினால் என்ன குடியா முழுகிப்போய்விடும்? இத்தகைய தொடர்கள், குறள் மணிகள் தமிழில் பற்பல மிளிர்வதை சர்க்கார் அறியாரா, அன்றி, அறிந்திருந்தும் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடை நடுங்குகின்றனரா என்று கேட்கிறோம்.

அரசியலில் வடநாட்டாருக்கும், மொழியில் ஆரியத்துக்கும் இந்நாட்டு மக்களைக் காட்டிக்கொடுக்கும் சர்க்கார், பொறுப்புக்கிறனுள்ள சர்க்காராயிருக்க முடியுமாவென்று கேட்கிறோம்.

"நம்பிக்கைத் துரோக நாசக்காரக் கும்பலை நசுக்க வாருங்கள்!"

———(0)———

சீனக் கம்யூனிஸ்டுகளுக்கு திபேத்திய புத்தர் அழைப்பு

"திபெத்துக்கு விடுதலையளியுங்கள். நம்பிக்கைத்துரோக நாசக்கார கும்பலை ஒழித்துக்கட்டுங்கள். மக்களை விடுவியுங்கள்."

என்று 'திபேத்தின் இக்கால புத்தராகிய' பன்னிரண்டு வயதுடைய பஞ்சன் லாமா, சீனக் கம்யூனிஸ்ட்களைக் கேட்டுக் கொண்டுள்ளாரென்று பீகிங் வானொலி நிலையம் 24-ந் தேதியன்று அறிவித்துள்ளது.

திபேத்தைக் கைவசப்படுத்திக் கொள்வது கடினமான காரியமல்லவென்றும், 'இப்பொழுதா பிறகா' என்பதுதான், பிரச்சினை யென்றும் கம்யூனிஸ்ட் தலைவர் மோசி-துங்கும் தளபதி சூடேயும் அவனுக்கு உறுதிமொழி கூறியுள்ளனர்.

திபேத்திய மக்களின் விழைவை சீன சர்க்கார் விரைவில் நிறைவேற்றுமென்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

'பிரிட்டானியர் நல்ல முறையில்தான் நடத்தப்படுகின்றனர்'

சீனக் கம்யூனிஸ்ட்கள் பற்றி பிரிட்டிஷ் அரசுப் பிரதிநிதி

சீனாவில் பிரிட்டனின் அரசுப்பிரதிநிதியாக இருக்கும் சாரால்ஸ்டீவன்சனுடன் கலந்து பேச, அயல் நாட்டு மந்திரி தோழர் பெவின் அவரை லண்டனுக்கு அழைத்திருந்தார். சர் ஸ்டீவன்சன் விமானமூலம் 23-ந் தேதி லண்டன் வந்து சேர்ந்தார்.

"சீனாவின் நிலைமைபற்றி நானெதுவும் சொல்லமுடியாது. பிரிட்டானியரைக் கம்யூனிஸ்ட்கள் நல்லவிதமாகவே நடத்தி வருகின்றனர்" என்று தோழர் ஸ்டீவன்சன் நிருபர்களிடைக் குறிப்பிட்டார்.

டைப்ரைட்டர் தொழிற்சாலை

பங்களூரில் டைப்-ரைட்டர் தயாரிப்புத் தொழிற்சாலை யொன்று நிறுவ ஏற்பாடுகள் நடந்துவருவதாகத் தெரிகிறது. ரெமிங்டன் கம்பெனியாருடன் இது பற்றிப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறதாம். வட்டார மொழிகள் ஆங்கிலம், இந்தி ஆகியவற்றிலெல்லாம் டைப்ரைட்டர்கள் தயாரிக்கப்படுமெனக் கூறப்படுகிறது.

மதன பள்ளியில் விவசாயகாலனி

மதனப்பள்ளி தாலுகாவைச் சேர்ந்த புங்கனூர் ஜில்லா போர்டார் விவசாய காலனியொன்றைத் துவக்கி வருகின்றனர். இத ஜில்லா போர்டு தலைவர் தோழர் ... சி. செங்கல்ராயநாயுடு அறிவித்துள்ளார். இதற்காக ஐம்பது ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

பூனாவில் பென்சிலின் உற்பத்தி

பென்சிலின் உற்பத்திக்கும், மலேரியா ஒழிப்பு மருந்துகள், சல்பா மருந்துகள் ஆகியவற்றின் தயாரிப்புக்குமாக நான்கு கோடி ரூபாய்த்திட்டமொன்றை இந்திய சர்க்கார் அனுமதித்துள்ளனர். இத்திட்டத்தை மத்திய சர்க்காரும், பம்பாய் சர்க்காரும்சேர்ந்து மேற்கொள்வர். மத்திய சர்க்கார் 60 சதவிகிதமும், பம்பாய் சர்க்கார் 40 சதவிகிதமும் முதலீடு செய்வர். இதற்கான தொழிற்சாலை பூனாவுக்கருகில் தேஹு ரோடில் நிறுவப் பெறுமெனத் தெரிகிறது கார்ன் போல செட் என்ற ஸ்விஸ் மருந்து உற்பத்தித் தொழிற்சாலையார் இத்திட்ட நிறைவேற்றத்துக்கு ஆலோசனையாளராயிருந்து வருவாராம்.

மாலை மணி

சென்னை 26—11—49 சனிக்கிழமை

சட்டம் நொறுக்கப்படுகிறது!

மது மனிதனைப் பல சமயங்களில் மிருக நிலைக்குக் கொண்டு போய்விடுகிறது. அதனால் சமுதாயக் கட்டுக்கோப்புக்குப் பெருந் தீங்கு விளைகிறது; குடிப் பழக்கம் பல ஏழை எளியவர் குடும்பங்களை வறுமையில் வாட்டி வதைக்கும்நிலைக்குக்கொண்டு வந்து சேர்த்துவிடுகிறது, அதனால் பல குடும்பங்களிலே மனைவி மக்கள் பெருந் துன்பத்திற்கு ஆளாக வேண்டி நேரிட்டுவிடுகிறது. இந்தக் கொடிய காட்சிகளைக் கண்டு, அவற்றினின்றும் சமுதாயத்தையும், ஏழையரையும் காப்பாற்றவேண்டும் என்று கருதிய நல்லறிவு படைத்தோர் அனைவரும் குடிப்பழக்கம் ஒழிக்கப்படவேண்டும் என்று ஆவல் கொண்டனர்.

இத்தகைய ஆவல், நீண்ட நாட்களாக எல்லா நாட்டிலும் நல்லறிவாளர்களிடத்தில் இருந்துதான் வந்திருக்கிறது. அவர்கள் அறிவுரைப் புகன்று பார்த்தனர், அதனால் பெற்ற வெற்றி மிக மிக சிறிதே! மேற்குறித்த தீங்குகள் ஒழிய வேண்டும என்பதுதான் மக்களின் பொதுவான நோக்கம், மது ஒழிய வேண்டும் என்பது கூட அல்ல முக்கிய நோக்கம. ஆனால், மது ஒழிந்தால்தான் தீங்குகள் ஒழியும என்ற நிலை ஏற்படுவதால, தீங்குகள் ஒழிய வேண்டும் என்பதிலே ஆவலுடைய மக்கள், மதுவை ஒழிக்கவேண்டுமென்பதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கத்தலைப்பட்டனர்.

சென்னை சர்க்கார் மதுவை ஒழிக்கச் சட்டம் கொண்டு வந்த நிலையில், பெரும்பாலான மக்களும் அதற்கு ஆதரவு தந்தனர். மது ஒழியும், அதனால் ஏற்படும துன்பங்களும் ஒழியும் என்று எண்ணினர். மதுவை ஒழிப்பதால் 17 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நஷ்டம்ஏற்படுவதானலுங்கூட அதைப்பற்றிக் கவலையில்லை என்று கூறினர். அதன்படி, சென்னை மாகாணம முழுவதும் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. சட்டம் நிறைவேறிற்று, ஆனல் நோக்கம், இன்னமும் நிறைவேறவில்லை.

அரசாங்கத்தின் வருமானம் ரூ 17 கோடி நின்றது என்பதுதான், கண்கண்ட பலனாக இருக்கிறதேயல்லாமல், வேறு பலன் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. திருட்டு மது தயாரிக்கும் முறை, சர்வ சாதாரணமாக எங்கும் பரவி விட்டதால், மதுவிலக்கினல் எதிர்பார்த்த பலன் ஏதும் உருவாகாமலே போய்விட்டது. முன்னள் அமைச்சர் ஓமந்தூர் ராமசாமியார் சில நாட்களுக்கு முன் வெளியிட்ட அறிக்கையில், சென்னை மாகாண மதுவிலக்குத் திட்டம் தோற்றுவிட்டதென்றே கூறவேண்டும் என்ற முறையிலும், அரசாங்கம் திறமையாக வேலை செய்தால்தான் திட்டம் ஓரளவுக்காவது வெற்றி பெறக்கூடும் என்ற முறையிலும் குறிப்பு காட்டியிருந்தார்.

சாராயம் போன்ற மது வகைகளைத் திருட்டுத்தனமாக காய்ச்சப்படுவதைத் தடுப்பதற்கு ஏற்றத்திறமை, தன்னிடத்தில் இருக்கிறதா என்பதைச் சரி பார்த்துக்கொண்டு அரசாங்கம் மதுவிலக்கில் இறங்கியிருக்க வேண்டும். அதைச் செய்ய இன்றைய அரசாங்கம் தவறிவிட்டது. இந்திய துணைக்கண்டத்தின் மற்றப்பகுதிகளில்மதுவிலக்கப்படாத பொழுது சென்னையில் மட்டும் விலக்க முற்பட்ட போது, நிலைமை சமாளிக்க முடியுமா என்பதையும் சீர்தூக்கிப் பார்த்திருக்க வேண்டும்? அதிலும்தவறினர்! அகில இந்தியாவையும் சேர்த்துக் கொண்டு செய்ய முயன்றிருக்க வேண்டும்? அதுவும் இல்லை! எல்லாவற்றையும விட பெருந்தடையாக இருப்பது, அகில உலகத்திலும் மதுவுக்குத் தடை விதிக்கப்படமானல் கள்ளத்தனமாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாவதை எத்துணை ஆண்டுகளுக்குத் தடுத்துக்கொண்டிருக்கமுடியும்? என்றவது ஒரு நாள் நிலைமை முறக்கப் பட்டுவிடுமே! என்ற ஐயமும் தோன்றுகிறது.

பிற நாடுகளிலிருந்து வந்து இறக்குமதியாகும் கள்ளச் சரக்குகளையும், இங்கேயே காய்ச்சப்படும் கள்ளச் சரக்குகளையும்தடுக்கமுயன்றல்தான் மதுவிலக்கு ஏற்படுத்தியதற்கு அர்த்தம் ஏற்படமுடியும். இந்த இரண்டுவித வழிகளினல் கிடைக்கும் மதுவகைகளே மதுவிலக்குச் சட்டத்தை உடைத்துவிட்டதென்றல், மந்திரி சபையே மதுவுக்கு வரவேற்பளிக்க திட்டம் ஒன்று கொண்டுவந்தால் நிலைமை என்ன ஆகும்! மதுவிலக்குச் சட்டம் இதுவரையிலுமாவது உடைபட்டுவந்தது, இப்பொழுது மந்திரி சபை கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கும் மசோதாவால் இனி நொறுக்கப்பட்டுவரும்என்பது உறுதி!

ராணுவத்தினருக்கும், ராணுவத்தினரோடு சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கும், இதர சிப்பந்திகளுக்கும மதுபானத்திற்கான லைசென்சு கொடுக்கும் மசோதா மந்திரி சஞ்சீவி ரெட்டியாரால் கொண்டுவரப்பட்டு, காங்கிரஸ் சட்ட மன்ற அங்கத்தினரின் ஆதரவு பெற்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதைத் தவிர, முன்னமேயே சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் சிலருக்குப் பர்மிட் முறையில் மதுவருந்த உரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. இதுதான் மதுவிலக்கை வெற்றிகரமாக நடத்துவதன் முறையா எனக் கேட்கிறோம்? இந்தச் சலுகையும், பர்மிட்டும் இந்த அளவோடு நின்றுவிடும் என்றுதான் யார் எதிர்பாக்க முடியும்? பர்மிட் வழங்கும் முறை, நாளடைவில் பெரும்பாலானவர்களுக்கும் திருப்தி அளிக்கும் வகையில் சென்றுதானே முடிவு பெறும்? இந்த முறையைக் கையாளுவதற்குப் பதிலாக மதுவிலக்கையே எடுத்து விட்டால் அரசாங்கத்திற்காவது ரூ. 17 கோடி வருமானம் கிடைக்குமே!

காங்கிரஸ் மந்திரியாருக்கு மது விலக்கில் எவ்வளவு 'அக்கரை', இருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு; மந்திரி சஞ்சீவி ரெட்டியார் ராணுவத்தினர்க்கு மதுவகை அளிக்க வேண்டும் என்ற அவசியத்தை வற்புறுத்துங்கால் அவர் கூறும் காரணத்தைக்கேளுங்கள்.

"மாகாணத்தில் ஆயிரக் கணக்கான அந்நிய நாட்டினர் மதுபானத்திற்குப் பர்மிட் பெறும்போதுஏன் ஒரு சில இந்தியர்கள் அந்தப் பர்மிட்டைப் பெறக்கூடாது?"

என்று கேட்கிறர் எப்படி இருக்கிறது காந்திய சீடரின் வாதம்! **"ஒரு சில இந்தியர்கள் பர்மிட் பெறும்போது ஏன் ஏனைய இந்தியர்கள் பெறக் கூடாது"** என்ற வாதத்தை அடுத்தத் தடவையில் எழுப்பி, மதுவிலக்கையே ஒழித்துவிட இந்த அரசாங்கம் முயன்றலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தோழர் தென்னேட்டி விசுவநாதம் எடுத்துக்கூறியது போல, மதுவிலக்குச்சட்டத்தில் பல சலுகைகள் அளிப்பதை பொருளாதார ரீதியில் நின்று சட்டத்தை புனராலோசனை செய்து, மதுவிலக்கை ஒழித்து விடுவதாவது ஒரு விதத்தில் நல்லது. சட்டத்தை ஒழித்து விட்டால் பிறகு சட்டத்தை மீறுவது, சட்டத்தை உடைப்பது போன்ற குற்றச் சாட்டுகளுக்காவது இடமில்லாமலிருக்கும்! இப்பொழுது நிறைவேற்றப் பட்டிருக்கும் மது விலக்குத் திருத்த மசோதாவால், இருக்கும் சட்டம் மேலும் மேலும் நொறுக்கப்பட வசதி ஏற்படுமே தவிர, மது விலக்கு நோக்கம் நிறைவேற வழியுண்டாகாது!

மாவட்ட முனிசிப்களுக்கு அதிகாரம்

சென்னை மாகாணத்திலுள்ள ஜில்லா முனிசிப்கள் அனைவருக்கும் முதல்தா மாஜிஸ்ட்ரேட்கள் அதிகாரத்தை வழங்குவதென முடிவு செய்து, சென்னைசர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளனர் எனினும், முதல் நான்கு மாதத்துக்கு இரண்டாந்தரவழக்குகளே அவர்களுக்கு வரும், அதன் பின்னர்தான் முதல் தர வழக்குகளும் மாற்றப்படும்.

'காங்கிரஸ் சர்க்காரின் பிற்போக்குக் கொள்கையை வெறுக்கிறோம்'

கேரள காங்கிரசார் 19-பேர் ராஜிநாமா

கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தோழர் எம். வி. வர்க்கி, மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் தோழர் என். பி. ஜோசப் இன்னும் பிரபல காங்கிரசார் 19-பேர் ஆகியோர், காங்கிரசை விட்டு ராஜிநாமா செய்து, வெளியேறினர். 'காங்கிரஸ் சர்க்காரின் பிற்போக்குக் கொள்கை' தங்களுக்குப் பிடிக்கவில்லை யென்று அவர்கள் அறிவித்துள்ளனர்.

பாரிஸ் தீர்ப்பு!

நிர்வாணப் பெண்களை போட்டோ பிடிக்க போட்டோ கிராபர்களுக்கு உரிமை உண்டு. நிர்வாண படங்களை பிரசுரிக்க பிரசுரகர்த்தர்களுக்கும் உரிமை உண்டு. பாரிஸிலுள்ள ஒரு கோர்ட்டு அளித்த தீர்ப்பு இது. இவ்வாறு தீர்ப்பளிக்க விடில் மியூஸியங்களிலும் சித்திரக் கூடங்களிலும் உள்ள சிலைகளை அவ திப்பது போலாகுமென்று கோர்ட்டு தீர்மானித்தது.

நிர்வாணப் படங்கள் நிறைந்த ஒரு பத்திரிகைமீது தொடரப்பட்ட வழக்கு சம்பந்தமாகவே இந்த தீர்ப்பளிக்கப்பட்டது. சிற்பிகளுடனும் ஓவியர்களுடனும் போட்டி போடக்கூடிய சாமர்த்தியம் தற்கால போட்டோ கிராபர்களுக்கும் இருப்பதால், சிற்பிகள் அனுபவித்து வந்த சலுகைகளைப் போட்டோகிராபர்களும் பெற உரிமை உண்டு என்று கோர்ட்டு கூறியது.

உலக பாங்கி கடன்

வாஷிங்டன், நவ. 22—

தாமோதர அணையில் மின்சார நிலையமொன்று அமைப்பதற்காகஅடுத்தசிலவாரங்களில் உலக பாங்கி இந்தியாவுக்கு 2 கோடி 50 லட்சம் டாலர் கடனளிக்கும் என்று பாங்கி அதிகாரிகள் கூறினார்கள். இது இந்தியாவுக்குக்கிடைக்கும் 3-வது கடனாகும். ஏற்கனவே போக்குவரத்து சீரமைப்புக்காக 3 கோடி 40 லட்ச டாலரும் விவசாய அபிவிருத்திக்கு 1 கோடி டாலரும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டரை கோடி டாலர் கடனுக்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன தாமோதர திட்டம் டென்னஸீ அணையை ஓரளவு ஒத்திருப்பதாகவும் மின்சார நிலையம் அதில் ஒரு பாகமென்றும் பாங்கித் தலைவர் யூஜின் பளாக் சென்ற மாதம் சொல்லியிருக்கிறர்.

ஆராய்ச்சித்துறையில் அடுத்து ஓர்படி!

சென்னை லபோலா கல்வி ரசாயனத் துறையில் சில நாட்களாக ஆராய்ச்சி செய்ததின், விளைவாக, மூங்கில் பருப்பு ஒட்டிலிருந்து வரும் எண்ணெயை சுத்தம் செய்து அந்த எண்ணெயினல், வார்னிஷ் (வர்ணப் பூச்சுக்கள்) பிளாஸ்டிக்குகள் முதலியவை தயாரிக்கமுடியும் என்று தெரிகிறது.

அஞ்சா நெஞ்சன் அழகிரியின் தாயார் மறைந்தார்

பட்டுக்கோட்டை, மறைந்த அஞ்சாநெஞ்சன் சே. வி. அழகிரிசாமியின் தாயார் 22-11-49 இரவு 9-மணிக்கு இயற்கை எய்தினர்கள் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். தந்தையாரை இழந்து தவித்திடும் மக்களுக்கு பாட்டியார் ஒரு ஆறுதலாக இருந்து வந்தார்கள். அந்தப் பற்றுக்கோடும் அற்று விழுந்ததால், அழகிரிசாமியின் மக்கள் பெருந்துன்பத்தில் தள்ளப்பட்டவர்கள் ஆவார்கள். அம்மையார் திடீரென்று ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக இயற்கை எய்தினர்கள் என்று அறிவிக்கப்படுகிறது. மகனைப் பிரிந்த பிரிவாற்றாமையின் காரணமாக ஏற்பட்ட பெருந்துயரின் விளைவாலோ என்னமோ அம்மையார் தம் முதிர்ந்த வயதில் இயற்கை எய்த வேண்டியதில்லை, தொடர்ந்து நிகழ்ந்துவிட்டது.

தந்தையை முன்னில் இழந்து, பின்னர்பாட்டியாரையும் இழந்து வருந்தும் அழகிரிசாமியின் மக்களுக்கும், மற்றையோர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபம். (ஆ-ர்)

கட்டாய சேமிப்புத் திட்டம்

சென்னை நவ 24—

மத்திய சர்க்காரின் திட்டத்தைப்பின்பற்றி சென்னை மாகாண அரசியலாரும் தங்கள் சிப்பந்திகள் விஷயத்திலும்கட்டாயசேமிப்புத்திட்டத்தை அமுல் நடத்துவதென முடிவு செய்திருக்கிறார்கள்.

புதிய திட்டம் நவம்பர் மாதத்திய சம்பள விஷயத்திலேயே அமுலாகும். 1952 பிப்ரவரி மாதம் வரை அது நடைமுறையில் இருக்கும்.

ரூபாய் 250-ம் அதற்குக்குறைவாகவும் சம்பளம் வாங்குகிறவர்களை இத்திட்டம் பாதிக்காது என்று சொல்லப்படுகிறது.

ஆள் ஒன்றுக்கு 1 ரூபாய் கொடுங்கள்!

இரயில்வே ஊழியர் சங்க முடிவு

புது டில்லி, நவ. 23—

அகிலஇந்திய இரயில்வேஊழியர் சம்மேளனச்செயற்குழு இன்று டில்லியில் நடைபெற்றது. தோழர் ஜயப்பிரகாஷ் நாராயண் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில், ரயில்வேஊழியர்ஒவ்வொருவரும்முன்வரவேண்டுமென்றும் மாதந்தோறும் ஒவ்வொருவரும் குறைந்த அளவு 1 ரூபாயாவது கட்டாயமாக மிச்சப்படுத்த முன்வரவேண்டுமென்று அக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேனும் தேளின்கொடு விஷமும் ஒன்ருகுமா?

திராவிடமும் ஆரியமும் ஒரே இனமா?

ஓமலூரில் கருணாநிதி-சித்தையன் கருத்துரை

ஓமலூர் நவ. 22—

20-11-49 அன்று சேலம் மாவட்ட ஓமலூரில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்கூட்டம் மாலை 6 மணிக்கு ஆரம்பமாயிற்று தலைமை வகிக்க இருந்த தோழர் சித்தையன் அவர்கள் வழியில் தாமதப் பட்டுவிட்டதால். தோழர் எஸ். கே. பேபி அவர்கள் தலைமை தாங்கினுர்கள்

மு கருணாநிதி

தோழர் மு. கருணாநிதி அவர்கள் பேச எழுந்ததும் பல தோழர்கள் மாலையணிவித்து —ஓமலூர் திராவிட முன்னேற்றக் கழகக்கிளையின் சார்பாகவரவேற்புப் பத்திரமும் வாசித்தளித்தனர். தோழர் கருணாநிதி சுமார் 1-30 மணி நேரத்துக்கு மேலாக உணர்ச்சி மிக்க சொற்பொழிவாற்றினுர். அது வருமாறு:—

தலைவர் அவர்களே! தோழர்களே! நேற்று முன் தினம் நடந்த காங்கிரஸ் கூட்டத்திலே, அண்ணாத்துரை ஒரு அன்னக்காவடி என்று குறிப்பிட்டார்களாம். அண்ணாத்துரை தன்னை ஆநதன் ராஜா என்று எண்ணிக்கொள்ள வில்லை. அவரே ஒப்புக்கொள்கிருர் தான் அன்னக்காவடி தான் என்று!... மத்திய ஆசியாவிலிருந்து தென்னாட்டை நோக்கி அன்னக் காவடி எடுத்து வந்தவர் களின் பரம்பரையினர், நம்மை அன்னக்காவடிகளாக்கி விட்டு நம்மையே அன்னக்காவடி என்று சொல்லும்போதுதான் வேதனை ஏற்படுகிறது ஆரியத்தை அழிக்க முடியாது என்று காச்சிக்கிருர்கள் பாட்டன்பூட்டன் எல்லாம் முயன்று பார்த்தும் முடிய வில்லையென்றுபூணூலை உருவுகிருர்கள். ஒதுக்கிக்கொள்கிருேம். புத்தர் முயன்ருர்; தோற்ருர். வடலூரார் முயன்ருர்; தோற்ருர். சித்தர்கள் முயன்றனர்; தோற்றனர். ஆனல் ஒன்று—அவர்கள் முயற்சிக்கும் எங்கள் முயற்சிக்கும் பெருத்த வேறுபாடு உண்டு.

ஆணிவேரை அசைக்கிருேம்

சித்தரும், புத்தரும், வடலூராரும், வள்ளுவரும்- ஆரிய ஆலகாலவிஷ விருட்சத்தின்—கிளையை — வெட்டினுர்கள் ஒருவர்ஜாதி கிளையை, ஒருவர் சமயக்கிளையை, ஒருவர் மூடநம்பிக்கைக்கிளையை, இப்படியா வெட்டிவீழ்த்தினுர்கள், அந்த விருக்ஷம் வெட்ட வெட்ட வேறுபக்கம் துளிர்விட ஆரம்பித்தது அரசியல் கிளையாக—புராணக்கிளையாக—இதிகாசக் கிளையாக—கலைக்கிளையாக இப்படி வளர ஆரம்பித்தது எங்கள் நோக்கம் கிளையை மட்டும் வெட்டுவதல்ல. அந்த நச்சுமரத்தின் அணிவேரையே அசைத்து விடுகிற முயற்சியில் இறங்கியிருக்கிருேம். ஆகவே, வெற்றி எங்கள் பக்கந்தான். சந்தேகமேயில்லை. டல கூட்டங்களில் சொல்லிவிட்டோர் தனிப்பட்ட ஆட்கள் யாரும் எங்களுர்குப் பகைவரல்லர்! ஆரியம்தான் நாங்கள் பகைக்கும் பொருள்! ஆரிய மாயை அகலுவதுதான் நாங்கள் எதிர்பார்ப்பது ஆரியம் எந்த வடிவில் வந்தாலும் நாங்கள் அதன் விரோதிகளே! முஸ்லீம் முல்லாவாக வந்தாலும் கிறிஸ்தவப்பாதிரியாக வந்தாலும், வள்ளுவப் பண்டாரமாக வந்தாலும், எங்கள் கழகம் அதை எதிர்த்தே தீரும் ஆரியம் என்பதற்கு நாங்கள் கொள்ளும் அர்த்தம், பழமை—மூடநம்பிக்கை—ஒரு இனத்தை அடிமைப்படுத்தும் திமிர் என்பவைகள் தான்!

பார்ப்பனத் துவேஷிகளல்ல; பார்ப்பனியத் துவேஷிகள்

நாங்கள் பார்ப்பனத் துவேஷிகள் என்று தூற்றப்படுகிருேமே அது உண்மையா? கம்பன் தமிழன் தானே, அவன் காவியத்திலே குற்றம் காணவில்லையா? காமராச தமிழர்தானே—அவர் கண் மூடிப்போக்கை நாங்கள் ஆதரிக்கிருேமா? டி. கே. சிதம்பரநாதர் தமிழர்தான்-அதற்காக அவர் கம்பர்தரும் காட்சியை ரசிக்கிருேமா?... தலைவரின் கொள்கை தவறிய போக்கையே கண்டித்துவெளியேறியவர்களாயிற்றே நாங்கள்! நாங்கள் பார்ப்பனத் துவேஷி என்று பழி சுமத்துவது பொருந்துமா? நாங்கள் பார்ப்பனத் துவேஷிகளல்ல, பார்ப்பனியத் துவேஷிகள்!

கடவுள் உன்னைப் படைத்தார் உனக்காக வயல்களைப் படைத்தார். உனக்காக நெல்லையும் கோதுமையையும் படைத்தார் என்பது உண்மையானல்—நீ அவைகளை அனுபவிக்கத்தான் வேண்டுமே தவிர, அதைக்கொண்டு கடவுளின் பசியைத் தீர்க்க ஆசைப்படுகிறுயே— அது கடவுளையே கீழாக மதிப்பது போலாகும் என்றுசொன்னல் அது நாஸ்திகமா? கடவுளை பானையாகவும், பூனையாகவும், லிங்கமாகவும், மூஞ்சூராகவும் சிருஷ்டித்து அவரை நீ அவமானப்படுத்துகிருய்— அது ஆஸ்திகம் என்று கூறுகின்ற நாங்கள நாஸ்திகரெனகிருய... பொருந்துமா இந்த வாதம்?

புயலும் தென்றலும் ஒன்ரு?

நமது கலையிலே-பண்பிலே-கலாச்சாரத்திலே- முரண்பாடு கண்டது ஆரியம். பாலையும் நீரையும் சேர்த்துவிடலாம்.பாலும் நீரும்விசித்தியாசமான பொருள்கள்.பாலையும் எண்ணையையும் ஒன்ருக்கமுடியாது. இரண்டும் முரண்பாடான பொருள்கள். இதை உணராமல்தான், நாமக்கல்லார்கள் ஆரியமாவது, திராவிடமாவது, இரண்டும்ஒன்றுதான் என்று நாவசைக்கிருர்கள். ஆரியத்தையும் — திராவிடத்தையும் இணைப்பது, தேளின் கொடு விஷத்தையும், தேனையும் இணைக்கினைப்பது போல! புயலும் தென்றலும் ஒன்றென்பதுபோல! கோட்டானும் குயிலும் வேறல்ல என்று விளக்குவதுபோல! வேண்டாம் இந்த வீண் விளையாட்டு! விட்டுவிடுங்கள்என்று ஆஸ்தானக் கவிஞருக்கு அறிவிக்கிருேம்.

கம்பரசம் திகட்டுகிறது!

ஒருபுறத்திலே நாங்கள் புதுப்பாதை அமைத்துச் செல்லும்போது, மந்திரிமார்கள் கம்பனைத் தூக்கி வைத்துக் கொண்டு—மக்கள் மனதிலே மாசு தூவக் கிளம்புகிருர்கள். ராமனைப் புத்தன் உருவத்திலே காணுகிருராம் கம்பர். மகாத்மாவின் உருவத்திலே காணுகிருராம். இப்படிப் பேசுகிறர் பிரதம மந்திரி குமாரசாமி ராஜா. ஜாதித் திமிர்கொண்ட ராமன்—சம்பூகன் என்ற சூத்திரன் தவம் செய்யக்கூடாது என்று அவன் தலையை வெட்டியெறிந்தபோது, கோட்சே உருவமாக மாறி விட்டான் என்பதை கம்பர் ஏன் பாடவில்லையோ தெரியவில்லை. மந்திரியாராவது சிந்திக்கவேண்டாமா? கம்பரசத்திலே திகட்டாத தித்திப்பு வழிந்தோடுவதாக வாயில் நீர் வழியப் பேசுகிற பண்டித சிரோன்மணிகளைக் கேட்கிறேன்; அயோத்திப் பெண்களின் கண்ணீரைக் கன்னத்தோடு நிறுததாமல்—கண்ணீராறு ஒன்று வெட்டி அதை மலைகளில் ஏற்றி—கடலில் கலக்கச் செய்த திருப்தியடைகிருனே, கம்பன்—அதைப் பார்த்த பிறகாவது வீட்டில் சும்மா உட்கார்ந்திருக்கக் கூடாதா?

நாட்டில் ஏற்பட்டுள்ள கஷ்டங்களைத் தீர்க்க—மந்திரிகள் கண்டுபிடித்துள்ள சுலபமான முறை கம்ப ராமாயண பஜனை! இப்படிப் பஜனை செய்துகொண்டே இருந்தல் மக்கள் மரத்துக்கு மரம் தாவ வேண்டியதுதான!

தவளையும்—எலியும்!

நாங்கள் ஏதாவது வாயைத் திறந்தால், காமராஜரிலிருந்து கடசியிலுள்ள கடைசி கதர்த் தொப்பிவரையிலே கர்ச்சனை புரிகிருர்கள், கனல் கக்குகிருர்கள். நேற்றைய கூட்டத்திலே "திராவிட நடு என்பது தவளையின் சத்தம் இந்தத் தவளைகள் சத்தம் போட்டு, சத்தம் போட்டு கடைசியில் வயிறு வெடித்துச் செத்துவிடுவார்கள்" என்று கூறி மகிழ்ந்தார்களாம். எங்கள் இனிய குரல் சில மந்திரிசபையினர்க்குத் தவளையின் குரலாகத் தோன்றுகிறது. அது செவியின் குற்றம்! எங்கள குரலிலே உள்ள குற்றமல்ல, திராவிட நாட்டாரை தவளைகள் என்பதை ஒப்புக் கொள்வதாகவே வாதத்துக்கு வைத்துக்கொண்டாலும், வடநாடு என்கிற எலியோடு தென்னுடு என்ற தவளையும் காலைக்கட்டிக் கொள்ள, உயரப்பறக்கிற அமெரிக்கா பருந்து எலியைக் குத்திக்கொண்டு பறக்கும் போது தவளையும் சேர்ந்து போகிற நெருக்கடியை நாங்கள் விரும்பவில்லை. எலி, பருந்துக்கு விருந்து. எலியோடு சேர்ந்தால் தவளையும் சாக நேரிடும். ஆகவே அந்த உறவு தேவையில்லை யென்பதுதான் எங்கள் தெளிவான முழக்கம் வடநாட்டு எலியோடு நம்மைப் பிணைத்துக்கொண்டதால் ஏற்பட்டுள்ள இழிவு கொஞ்சமா? ஜனவரி 26-ல் வெளிவரப் போகிற கரன்சி நோட்டுகளில் ஆங்கில எழுத்தும், இந்தி எழுத்தும்தான இருக்குமாம். ஆங்கிலேயன் ஆட்சியிலேகூட தமிழ் மதிப்போடு இருந்தது. அந்த கரன்சிநோட்டுகளிலே இருந்த தமிழ்— சுதந்திரக் கரன்சி நோட்டிலே அழிக்கப்படுவானேன்? கைவண்டி நிலையங்களில் தமிழ் மூன்ருவது இடம் பெறுவானேன்? தபால் தலைகளிலே வடநாட்டுச் சின்னங்கள அதிகமாகக் காணப் படுவானேன்? அமெரிக்காவிலிருந்துவரும் 375 டிராக்டர்கள் வடநாட்டை மாத்திரம் வளமாக்கிஉணவைப்பெருக்குவானேன்? சென்னை அரசாங்கம் கேட்ட ஆறுகோடிரூபாய் கடனை, வடநாடு அளிக்கமறுப்பானேன்? கம்பருக்கு உலாப் பாடும் உத்தமர்களே! எங்களைத் திட்டுகிற திருப்பணியிலே ஈடுபட்டுள்ள தேசிய நண்பர்களே! சிந்தித்துப் பாருங்கள்!

நாங்கள் நேர்மையாளர் யாருக்கும் விரோதியல்ல. பழமைக்கும் பாசிசதுக்கும்தான், இதை உணருங்கள்." என்பதாகப் பேசி, வரவேற்புப் பத்திரத்துக்கு நன்றி கூறி தன் சொற்பொழிவை முடித்தார்.

ஏ. சித்தையன்

கடைசியாக, தோழர் ஏ.சித்தையன் அவர்கள், தான் தாமதமாக வர நேரிட்டமைக்கு வருத்தம் தெரிவித்துக்கொண்டு சிறிது நேரம் பேசினுர்.

"திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த ஒருமாதத்துக்குள் முன்னூறுக்கு மேற்பட்ட கழகங்களாக தழைத்து விட்டது. கேரளத்திலே பல பகுதிகளில் எங்கள் குரல் கேட்க ஆரம்பித்து விட்டது. ஆந்திராவில், ராயலசீமாவில் எங்கள் கொள்கை அடியெடுத்து வைத்து விட்டது. விரைவில் திராவிடம் ஒரு மகத்தான மாறுதலை காணத்தான் போகிறது. அந்த மாறுதல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முயற்சியின் விளைவாகவே இருக்கும். நாட்டு நிலைமையை கூர்ந்து கவனிக்க வேண்டிய அவசியத்திலே நாம் இருக்கிருேம். அமெரிக்கா சென்ற பண்டித நேரு முதலாளிகளுடன் கைகுலுக்கி விட்டு வந்து விட்டார். நேருவின் விஜயம்பற்றி-ஒரு கூட்டத்தில் பேசிய திருமதி ரூஸ்வெல்ட்-நேருவுக்கு நேரு போலவே, ஜவஹர் மகள் மத்தியில் பழகவேண்டும் என்று ஜாடையாக இடித்துரைத்துள்ளார்கள். இதிலிருந்து நமக்குத் தெரிவதெல்லாம், அமெரிக்காவில் நேரு முதலாளிகளின் அன்புக்குரியவராகவே இருந்துவிட்டு வந்திருக்கிருர். என்பதுதான்! இந்திய அரசாங்கம் ஏழைகள் பக்கம் சாய்வதில்லை; முதலாளிகள் பக்கமே சாய்கிறது. நாட்டைக் கோட்டைவிட்டுப் போவது அறிவுடைமையாகாது அதற்கான போராட்டம் ஆரம்பித்தே தீரவேண்டும் என்பதாக விளக்கியதோடு, கைத்தறியாளரின் கஷ்டங்கள் பற்றியும் -அதில் அரசாங்கம் காட்டும் அசிரத்தைபற்றியும் குறிப்பிட்டார்.

இறுதியாக தோழர் முத்து மல்லப்பன் அவர்கள் நன்றி கூற, கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ.)

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

ஆலங்குடி

ஆலங்குடி, நவ. 23—

22-11-49ல் ஆலங்குடி, செட்டி ஊரணிக்கரையில்தோழர் ஆப. ராமசாமி அவர்கள் தலைமையில் தி. மு. க. பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு நகர மக்களும், கிராம வாசிகளும் வந்திருந்தனர்.

திருச்சி தோழர் நெடுமாறன். அவர்கள், தி.மு.கழகச் சீர்திருத்தங்களைப்பற்றியும் கொண்ணையூர். தோழர் நார்முகமது திராவிடமுன்னேற்றக்கழகம் இருக்க வேண்டிய அவசியம்பற்றியும் பேசினுர்கள். மக்கள் அனைவரும் கூட்டம் முடியும் வரையில் அமைதியாக இருந்து கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

முடிவுரையாக தோழர் (ஆப. ராமசாமி அவர்கள் தி. மு. க. அமைப்பைபற்றியும் திராவிடம் பிரிய வேண்டிய அவசியம் பற்றியும் தெளிவாக பேசினுர். கடைசியாக தோழர் செ. முத்தையா அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இரவு 9-30 மணிக்கு முடிந்தது. (வி உ.)

திருச்செங்கோடு

திருச்செங்கோடு, நவ. 23—

திருச்செங்கோடு தி.மு.க நகரக்கிளையின் சார்பாக 21-11-49 திங்கட்கிழமை மாலை 6மணிக்கு ஒரு பொதுக்கூட்டம், இவ்வூர் 40 கால் மண்டபத்தின் முன் தோழர் ஆ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தகாமங்களம் தோழர் பி. முனியப்பன், புதூர் சண்முகசுந்தரம், டி. வ. அப்பாவு, தோழ என். கே. பி. வேல், கோபி தோழர் ஜி. என். இராசு ஆகியவர்கள்தற்கால அரசியல் நிலையையும் தி. மு. கழகத்தின் ஆக்க வேலைகளையும் பற்றி நீண்ட நேரம் சொற்பெருக்காற்றினர். பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின், பொருளாளர் தோழர் இரா. செங்கோடன் நன்றிகூறக் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது முடிந்தது.

ஏஜண்டு தேவை

கீழ்க்கண்ட ஊருக்கு முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. விவரத்திற்கு எழுதவும்.

உதகை

. மானேஜர்

"மாலை மணி" சென்னை

ஐ. நா. சாஸனத்தின் அடிப்படை தகர்க்கப்படுகிறது

ஐ. நா.வின் ஆணையைப் புறக்கணிக்கும் அயோக்கியத்தனம்!

தென் ஆப்பிரிக்க அரசாங்கத்தின் ஆதிக்க வெறி

———:0:———

"நியூயார்க் டைம்ஸ்" கண்டனம்

"ஐ. நா. பொதுச் சபையின் சிபார்சுகளைப் புறக்கணித்த தனிப்பட்ட சிறுமை, தென்னாப்பிரிக்கா ஒன்றினிடமே காணப்படுகிறது. சோவியத் கோஷ்டியில் இல்லாத நாடுகளில் ஐ. நா. சபையின் கட்டளையை மீறும் நாடு, தென்னாப்பிரிக்காதான்.

தென் மேற்கு ஆப்பிரிக்க சுதேசி மக்களின் நிலைமையைக் கவனிக்கும்போது, தென்னாப்பிரிக்க சர்க்காரின் போக்கு, இன்னமும் மோசமாக இருக்கிறது. வெள்ளையர்தான் உயர்ந்தவர்கள் என்று கூறும் தெ. ஆப்ரிக்காவுடன், 3 லட்சம் தெ. ஆ. சுதேசிகள் சேர விருப்புவரா என்பது சந்தேகமே. அப்படியிருக்கையில், அந்த மக்களைத் தனது ராஜ்யத்தில் சேர்த்துவிட தெ. ஆ சர்க்கார் முயல்வது நியாயமல்ல."

என்று "நியூயார்க் டைம்ஸ்" என்ற அமெரிக்கப் பத்திரிகை அண்மையில் ஒருதலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

தென்னாப்பிரிக்க அரசியலாரின் அகம்பாவத்திற்கு எல்லையே இல்லை. கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே தெ. ஆ. அரசியலார் அடங்காப்பிடாரியாக இருந்து, ஐ. நா. சபையின் ஆணைகளை ஏற்க மறுத்து வருவது அகில உலகும் அறிந்த செய்தி.

முதலில், தென்னாப்பிரிக்க இந்தியர் விஷயத்தில் ஐ. நா. சபையின் ஆணையை நிறைவேற்றத் தவறியது அந்த அரசாங்கம். அதுமட்டுமின்றி, ஜெனரல் ஸ்மட்ஸ் கட்சியின் ஆட்சிப் பீடமேறிய தோழர் மலான், அசல் நிறவெறியாகவே காட்சி அளித்து வருகிறார். அவரது அரசாங்கம் தயாரிக்கும் ஒவ்வொரு சட்டமும் தென்னாப்பிரிக்க இந்தியருடையவும், சுதேசிகளுடையவுமான உரிமைகளைப் பறிக்கும் முறையில் அமைந்து வருதலை நாம் நாடோறுங் கவனித்து வருகிறோம்.

தோழர் மலானின் அதிகார ஆதிக்க வெறி இந்த அளவோடு மாத்திரம் நிற்காமல் அதீத ஆக்ராமிப்பு வெறியாகவே மாறத் தலைப்பட்டுவிட்டது. கடந்த முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியின் ஆதிக்கத்தின் கீழிருந்த பல நாடுகளை அன்றிருந்த சர்வதேச சங்கம் நேச நாடுகளிடம் ஒப்படைத்து, பாதுகாவல் முறைப்படி கண்காணித்து வரும்படி உத்தரவிட்டது. அப்படிப் பாதுகாவலின் கீழிருக்க வேண்டிய நிலைமைக்குள்ளான நாடுகளில் தென் மேற்கு ஆப்பிரிக்காவும் ஒன்று. இந்நாட்டின் பரப்பளவு, 3,17,725 சதுர மைல். மக்கள் தொகை ஏறக்குறைய 3 07,589 இதில் வெள்ளையர் தொகை 38,020 சுதேசிகள் தொகை 2 69,569. இவ்வளவு பெரிய நாட்டை தென்னாப்பிரிக்க அரசாங்கம் தன்னுடைய ஆட்சியின் கீழ்கொண்டு வந்து ஆதிக்கம் செலுத்த முற்படுகிறது. ஐ. நா. சபை கண்டிப்பாக, தெ. மே. ஆப்பிரிக்காவில் தாம ஏற்றுள்ள நிருவாகத்தை ஏற்பதற்குத் திட்டம் ஒன்று தீட்டித் தருமாறு கேட்டிருந்தது என்றால், சாதாரணமாக அல்ல மூன்று முறை அடுத்தடுத்து வற்புறுத்திக் கேட்டிருந்தது. தென்னாப்பிரிக்க அரசாங்கம் ஐ. நா. சபையின் இந்தக் கட்டளையைப் புறக்கணித்துவிட்டு, தெ. மே. ஆப்பிரிக்காவை ஆக்கிரமிப்பு முறையில் ஆட்சி செய்யப் பார்க்கிறது.

இங்ஙனம், உலகநீதி மன்றம் என்று கருதப்படுகிற ஐ. நா. சபையின் ஆணையைப் புறக்கணித்து விட்டு, நிறவெறியையும் இனவெறியையும் அடிப்படையாகக்கொண்டு ஆட்சி நடத்த விரும்பும் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தால் உலக அமைதிகெட நேரிடும் என்பது உறுதி. தென் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள, சிறு பான்மையினரான வெள்ளையரின் ஆதரவை நம்பி பெரும்பான்மையினரான சுதேசி மக்களை அடக்கி ஆள நினைக்கிறது தென்னாப்பிரிக்க அரசாங்கம் இது, மிக மிக வருந்தத்தக்கது இங்ஙனம். ஒருநாட்டுமக்களின் விருப்பத்துக்கு மாறாக, அவர்களுடைய நாட்டைக்கவர முயல்வது நாடு பிடிக்கும் ஆசையின் பாற்பட்டது. நாடு பிடிக்கும் கொள்கையும், மனித உரிமையைப் பறிக்கும் கொள்கையும் ஐ. நா. சாஸனத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும்.

ஆகவே, இத்தகைய அடாத செயல் புரியும் தென்னாப்பிரிக்க அரசாங்கத்தை விரைவில் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி விசாரித்துத் தக்கதாக வேண்டிய பொறுப்பு ஐ. நா. சபையின் இன்றியமையாக் கடனாகும், ஐ. நா. சபை இந்தக் கடமையைச் செய்யத் தவறினால் உலக அமைதி என்பது ஆசிரைக் கொப்பாக வருவது பு.

தூத்துக்குடி, விருதுநகரில் நாடகங்கள்!

டிச. 24, 25, 26 ஆகிய தேதிகளில்!

———(0)———

கே. ஆர். ராமசாமி, அண்ணாத்துரை நடிப்பார்கள்!

சென்னை, நவ. 25—

திராவிட முன்னேற்றக் கழக உதவி நிதிக்காக டிசம்பர் 24, 25 தேதிகளில் (சனி, ஞாயிறு கிழமைகளில்) தூத்துக்குடியில் இரண்டு நாடகங்கள் நடைபெறும். முதல் நாள் "சந்திரமோகன்", இரண்டாவது நாள் "நீதி தேவன் மயக்கம்" நடைபெறும். தோழர் சி. என். அண்ணாத்துரை, நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோரும், ஏனைய இயக்கத் தோழர்களும், நடிகமணிகளும் நாடகங்களில் நடிப்பார்கள். நாடகத் தூண்டக் கமிட்டியினர், இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

மறுநாள் விருதுநகரில்!

டிசம்பர் 26-ந் தேதியன்று "சந்திரமோகன்" நாடகம் நடைபெறும். விருதுநகர திராவிட முன்னேற்றக் கழகத்தினர், இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

இந்த நாடகங்கள் நிமித்தம் தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய ஊர்களுக்கு வரும்போது. தோழர் சி. என். அண்ணாத்துரை அவர்கள் எந்தவிதப் பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளமாட்டார்கள். நாடகக் குழுவினருடன் சென்றுவிட்டு, நாடகக் குழுவினருடன் சென்னைக்குத் திரும்பி விடுவார்கள். பிறகு மாவட்டச் சுற்றுப் பிரயாணம் துவக்கும் போதுதான் மாவட்டங்களைச் சேர்ந்த பல ஊர்களுக்கும் வர முயலுவார்கள். ஆகவே, நாடகம் நிமித்தம் வரும்போது தங்கள் தங்கள் ஊருக்கு வருமாறு, தோழர் அண்ணாத்துரை அவர்களை அழைக்காதிருக்குமாறு கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

செயலாளர்,
தி. மு. க. பிரசாரக்குழு,
தலைமை நிலையம்—சென்னை.

கலை அரங்கம்

"கருணாநிதி"

(நாடகம்)

கதைச் சுருக்கம்:—

சுந்தரம் பிள்ளையின் மகன் கருணாநிதியும், சேரியைச் சேர்ந்த மாணிக்கம் மகள் மாலதியும் பள்ளிக்கூட நண்பர்கள்; நட்பு காதலாக மாறுகிறது. மாலதியின் சிற்றன்னை தன் தம்பியை மணந்துகொள்ளும்படி வற்புறுத்த அவள் மறுக்கிறாள். பள்ளிப் படிப்பு முடிந்ததும், மாலதி தன் தந்தையுடன் சுந்தரம் பிள்ளையின் தோட்டத்தில் வேலை செய்கிறாள். அதைத் தற்செயலாய் கண்ட கருணாநிதி அவளைத் தடுத்து, தானே அவ்வேலையைச் செய்து முடிக்கிறான். மாலதியை எவ்வாறேனும் தன் விருப்பத்திற்கு இணங்கவைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் சுந்தரம் பிள்ளை அங்கு வர, காதலர்கள் இருந்த நிலையைக் கண்டு மனம் பொறுக்காது மாலதியை வேசி என்று படபடத்துக் கூறுகின்றார்.

கருணாநிதி தான் சென்னை சென்று ஒரு வீடு பார்க்கும் வரையில் மாலதியைப் பொறுத்துக் கொள்ளும்படி கூறி, தன் காதலியிடமிருந்து பிரியா விடை பெறுகிறான்.

சென்னையில் கல்லூரியில் கமலா என்றஇளம் விதவை ஒருத்தி கருணாவின்மேல் காதல்கொண்டு வீட்டிற்கு அழைக்கவே, மறுக்க முடியாமல் கருணா போகிறான். அங்கு அவள் தன் விருப்பத்தைவெளியிட, கருணா மறுத்துத் தனக்கு ஏற்கெனவே மணமாகிவிட்டதென்று கூறுகிறான். கருணாவை அவன் மனைவியுடன் அங்கேயே தங்கலாம் என்று கமலா அழைக்கவே கருணா தன் ஊருக்குப் புறப்படுகிறான்.

இதற்கிடையில், மாலதி கர்ப்பவதியாகிறாள். சுந்தரம்பிள்ளையின் சூழ்ச்சியால், பணத்திற்கு ஆசைப்பட்ட மாலதியின் மாமன், கருணா வரும் நேரம் பார்த்து, மாலதியைக் கட்டிப் பிடிக்கிறான். இதைக்கண்டு பொறாத கருணா அவளைக்கண்டபடி ஏசி, மறுபடியும் சென்னைக்குச் சென்று விடுகின்றான். கமலாவும், கருணாவும் காதல் வயப்படுகின்றனர்.

இதற்கிடையில், மாலதியின் மாமன்தான் செய்த துரோகத்தை நினைத்து அதே நினைவால் அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிடுகின்றது. அவன் மூலம் உண்மையை உணர்ந்த கருணா, மாலதியைத் தேடி ஓடுகின்றான். ஆனால் ஊராரால் துரத்தப்பட்ட மாலதி உயிர் துறக்கின்றாள்.

சென்னை வி. பி. ஹாலில் குறள் நடிகர் குழுவினரால் "கருணாநிதி" என்ற இந்தச்சமூகநாடகம், தோழர் அண்ணாத்துரை அவர்களின் தலைமையில, கடந்த 14ந் தேதியன்று வெகுசிறப்புடன் நடந்தேறியது.

பொதுவாக எல்லாநடிகர்களுமே குற்றங்குறையின்றி நடித்தார்கள்.

"கருணாநிதி"யாக நடித்த தோழர். பிரான்ஸிஸ்ஸின் நடிப்பு தொழில் நாடகங்களில் நடித்துப் பழக்கப்பட்டவரைப் போலவே குற்றமின்றி திறம்பட இருந்தது.

மாலதியாக நடித்த தோழியர் சாவித்திரியின் நடிப்பு வெகு கச்சிதம். நடிப்பு, பேச்சு அனைத்தும் மிகப்பொருத்தம்.

கமலாவாக நடித்த தோழியர், பாத்திரத்திற்கேற்ப நடித்தார் வாழ்க்கை தவறி அவதியுறும் இளம் விதவைகளின், பரிதாபநிலையை நன்றாகச் சித்தரித்துக்காட்டினார்.

சுமார் 4-30 மணி நேரம் நாடகம் நடந்தும்கூட சலிப்புத் தட்டாமல் இருந்ததைக்கூ, 'காமிக் ஜோடி'யாக வந்து களிப்பூட்டிய, மண்ணுவாக நடித்த கோவர்தனனும்— வேலைக்காரியாக நடித்த ஞானம் என்ற சிறுமியுமே ஆவார்கள். கம்பெனி நாடகங்களில் காமிக் காட்சிகள் மிக மட்டமாக போய்க்கொண்டிருக்கும் இந்நாட்களில் அமெச்சூர் நாடகத்தில் இவ்வளவு சிறப்பாக காமிக் இருந்தது பெரிதும் பாராட்டத்தக்கது.

பொதுவாக, எல்லா நடிகர்களுமே "தடார்—தடார் என்று விழுவது சகிக்கமுடியாததாகஇருக்கிறது. அடுத்துவரும் நாடகங்களில் இக் குறையை நிவர்த்தி செய்து கொள்வரென்று எண்ணுகிறோம். தோழர்பாலு அவர்களால் அமைக்கப்பட்ட பின்னணி சங்கீதம் நாடகத்தின் வெற்றிக்கு முக்கியகாரணமாகும்.

மாலை 6 மணிக்கு துவக்கப்பட்டு இரவு பத்து மணிக்கு, தோழர் அண்ணாத்துரை அவர்களின் பாராட்டுதலோடு நாடகம் முடிவுற்றது. இம்மாதிரியான சீர்திருத்த நாடகங்களை ஒவ்வொருவரும் அவசியம் பார்த்து, அனுபவித்து அக்குழுவினரை மேன்மேலும் நாட்டிற்குப்பணிபுரிய ஊக்கமளிக்கவேண்டியது நம் கடமை.

—கலே

"தமிழ்த் தொண்டன்"

பொன்மலை, நவ. 21—

திருவெறும்பூர் உயர்நிலைப்பள்ளி உதவி நிதிக்காக, 19—11—49 அன்று, பொன்மலை தமிழ் மலர்ச்சி நாடகக் குழுவினரின் "தமிழ்த் தொண்டன்" நாடகம் திருவெறும்பூரில்நடைபெற்றது. நாடகத்திற்கு புரட்சிக்கவிஞர்பாரதிதாசன் அவர்கள் தலைமை வகித்துச் சிறப்பித்தார்கள், தோழர்கள் குடந்தை எஸ் கே. சாமி; சி. பி. சிற்றரசு ஆகியோரும் கலந்துகொண்டனர். தலைவர் தம் முடிவுரையில், நாடகத்தை வெகுவாகப் பாராட்டி விட்டு, அந்நாடகக் குழுவின் நடிகர்தோழர் கே. எல். பக்கிரிசாமிக்கு "நடிகமணி" என்ற பட்டத்தை வழங்கினார்.

"சமூகத் தொண்டன்"

சிங்காநல்லூர், நவ. 23—

கோவை, சிங்காநல்லூர் ஆதித் திராவிட வாலிபர் கழகத்தின் சார்பில். 18—11—49 அன்று இரவு, 10.30 மணிக்கு "சமூகத் தொண்டன்" என்ற நாடகம் நடைபெற்றது. தோழர் எஸ். பி. பழனிச்சாமி அவர்கள் நாடகத்தைப் பாராட்டிப் பேசியதோடு, நாடக 'டைரக்டர்' தோழர் ஏ. எஸ். சிவன் அவர்களுக்கும், நாடக ஆசிரியருக்கும், நாடக குழுவினருக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கினார்.

புழலேரி நீர் மட்டம்

சென்னை, நவ. 23—

புழலேரியின் இன்றைய நீர் மட்டம் 4203 அடி. நேற்றைய நீர் மட்டம் 41.90 அடி. சமீபத்தில் பெய்த மழையானது நகருக்கு இப்பொழுது தினசரி சப்ளை செய்யப்படும் அளவில் ஒன்றரைமாத சப்ளையைக் கொடுத்துள்ளது என்று கருதப்படுகிறது.

சோழவரத்திலிருந்து புழலேரிக்கு வரும் கால்வாயில் 4½ அடி தண்ணீர் ஓடுகிறது. புழலேரி மட்டம் மேலும் உயரும் என்று நம்பப்படுகிறது.

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களிலும், அனுப்பும் மணியார்டர்களிலும் தங்கள் சந்தா எண்ணைக் குறித்து எழுதும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். சந்தா எண் குறிக்காமல் எழுதினால் கவனிப்பாரற்று விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர் 'மாலைமணி'

யதேச்சாதிகாரத்துக்கு ஏற்ற பாதை அமைக்கப்படுகிறது!

சட்டத்துக்கு முதலிடம், நீதிக்கு இரண்டாம் இடம்!

புதிய அரசியலுக்கு அல்லாடியார் தரும் விசித்திர விளக்கம்

நீதிமன்றம் சுதந்திரமாக இருக்கவேண்டியது அவசியமே. ஆனால், சட்ட சபைக்கும் மேற்பட்ட ஸ்தாபனமாக அது இருக்க முடியாது.

பார்லிமெண்டின் முடிவுக்கு விடவேண்டிய பல விஷயங்கள் அரசியல் சட்டத்தில் இடம் பெற்றிருப்பதாகக் கூறப்பட்டது. பார்லிமெண்ட் வேலைசெய்ய ஆரம்பிக்கும்பொழுதே பலவிதமான சர்ச்சைகளுக்கு இடம் தருவதைத் தடுத்து நேரடியாகச் செயலில் இறங்குவதற்குப் பாதை சுலபமாக்கப்பட்டிருக்கிறது.

அரசியல் திட்டம் சமய சந்தர்ப்பங்களுக்குத் தக்க முறையில் வளைந்துகொடுக்கும் தன்மையில் இருக்கிறது.

இது, இந்திய உபகண்டத்தின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்க புது டில்லியில் கூடிய புண்ணியர்களில் ஒருவரான தோழர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யரின் வாதம்.

அல்லாடியாரைப்பற்றி நாடு நன்கறியும். அவர் ஒரு சிறந்த சட்ட நிபுணர், அரசியல் அறிந்தவர். ஆகவே, அப்படிப்பட்டவரின் பேச்சை யாரும் அலட்சியப்படுத்துவதற்கில்லை. மேலும் புதிய அரசியலமைப்பைக் குறை கூறுகிறவர்களுக்குப்பதில் சொல்லும் முறையிலும், அரசியலமைப்புக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசும் முறையிலும் அவர் பேசியிருப்பதைப்பார்க்கும்போது, அவரது பேச்சினை அரசியலாரின் அந்தரங்கமெனவே நாம் கொள்ள வேண்டும்.

"நீதி மன்றத்துக்குப் போதிய அதிகாரமில்லையே; இருக்கின்ற அதிகாரங்களும் பறிக்கப்படுகின்றனவே, இங்கிலையில் நீதி நிலைப்பது எங்ஙனம்!" என்று நாம் அடிக்கடி கேட்பதை வாசகர்கள் அறிவர்.

நமது இத்தகைய கேள்விகளுக்கு விடைதரும் முறையில் அல்லாடியார் மிகத்திறமையாக தமது வாதத்தை நீட்டுகிறார்.

"நீதி மன்றங்கள்சுதந்திரமாக இருக்கவேண்டுவது அவசியமே, ஆனால், அவை சட்ட சபைகளுக்கு நடா" என்கிறார்.

அதாவது, நீதி, சட்டம் என்னும் இவ்விரண்டினுள் நீதியை விட சட்டத்திற்கே முதலிடம் தருகிறார் அல்லாடியார். பொதுவாக நீதிக்கு முதலிடம் அளிப்பதுதான் உலகியல்பு. அந்த இயல்பையும் மீறி சட்டத்துக்குச் சபைக் கட்டு கட்டுவதற்கு அல்லாடியார் தமது சட்ட அறிவை, சக்கின் வாதத்தைப் பயன்படுத்துகிறார்.

இது மிக மிக வருந்தத் தக்க செய்தி. சட்டம் மனிதனால் ஆக்கப்படுவது. அது எப்படி வேண்டுமானாலும் வளைந்து கொடுக்கும் சட்டத்தைக் கொண்டு ஆக்க வேலையும் செய்யலாம், அழிவு வேலையும் செய்யலாம். அது யாரிடம் சிக்குகிறதோ அவரது தன்மையைப் பொறுத்தது. பாசிச ஆட்சியாளரிடம் சிக்கிய சட்டங்கள் பாசிசத்தை வளர்க்கப் பயன்படும். ஜனநாயக வாதிகளிடம் சிக்கினால், ஜனநாயக வளர்ச்சிக்கு வழிகோலும். இவ்வண்ணம் நிலைமைக்கேற்ப வளைந்து கொடுக்கும் காரணத்தினாலேயே, "சட்டம் ஒரு கழுதை" என்றார் ஓர் அறிஞர்.

அப்படிப்பட்ட கழுதைக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு நீதிக்கு இரண்டாவது இடம் காட்டிப் பேசும் அல்லாடியாரைக் கண்டு நாம் பரிதாபப்படுவதைத் தவிர வேறென்ன செய்வதென்றே புரியவில்லை.

சட்டம் காலப் போக்கிலே அதன் சக்தியை இழந்துவிடும், தனது எல்லையைக் கடந்து எதேச்சாதிகாரம் செய்வதும் இயல்பு. இப்படிப்பட்ட நிலையில் அத்தகைய சட்டங்களின் கொட்டங்களை அடக்கி அவற்றை முறைப்படி செலவிடும் பணியை மேற்கொள்வது நீதி மன்றத்தின் கடமையாகும். இந்தக் கடமையைத்தான் தட்டிக் கழிக்கப் பார்க்கிறது புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் அரசியல்.

இங்ஙனம் நீதியைப் புறக்கணித்துவிட்டு, எதேச்சாதிகார ஆட்சி நடத்த ஆரம்பிக்கிறது இந்திய சர்க்கார் என்பதை அல்லாடியாரின் வார்த்தைகளிலிருந்தே ஐயந்திரிபற அறியலாம்.

பார்லிமெண்ட் வேலை செய்ய ஆரம்பிக்கும் பொழுதே பலவிதமான சர்ச்சைகளைத் தவிர்த்து நேரடியாகச் செயலில் இறங்குவதற்குப் பாதை சுலபமாக்கப்பட்டிருக்கிறது." என்று அவர் குறிப்பிடுவது இதனை விளக்குவதாகும்.

சர்ச்சைக்கு இடமிருக்கக் கூடாது!

ஆரம்பத்திலேயே தொல்லை கூடாது. நேரடியாக செயலில் இறங்க வேண்டும்.

இத்தனைக்கும் பாதை திறந்து விடப்பட்டு சுலபமானதாக இருக்கவேண்டும்.

இவைதான் இந்திய உபகண்டத்தை ஏகபோகமாகக் கட்டியாள விரும்புவோரின் சிந்தையிலிருந்து சிதறிய கருத்துக்கள்.

இத்தகைய கருத்துக்களை அடிப்படையாகவைத்து, ஆட்சி நடைபெறுமானால், அவ்வாட்சி முறை எதேச்சாதிகார முறையாக இருக்குமா, ஜனநாயக முறையாக இருக்குமா என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கேவிட்டு விடுகிறோம்.

இனி நடப்பவை

சென்னை:—சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில், புலவர் திரு. எ. து. கோதண்ட ராமராசம் "திருக்குறளும் ஐந்திணை ஐம்பதும்" என்னும் பொருள் பற்றிப் புரசை வைக்கோற்காரன் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் 27—11—49 ஞாயிறு மாலை 6 மணிக்குப் பேசுவார்.

* * *

சென்னை:—திருவல்லிக்கேணி தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 27—11—49 ஞாயிறு காலை 9 மணிக்கு தாணப்பச் செட்டித் தெரு, 21-வது இல்லத்தில் நடைபெறும். செயற்குழுவினரனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

வேலூர் :—இந்நகர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழா, 27-11-49 ஞாயிறு அன்று டவுன் ஹாலில் நடைபெறும். தோழர் கே. ஏ. மதியழகன் பி. ஏ. அவர்கள் "மாணவர் கடமை" என்பது குறித்து சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

சென்னை :—வேளாளத் தேனும் பேட்டை, தமிழ் இளைஞர் கழகத்தின் சார்பில், 27-11-49 ஞாயிறு மாலை 5 மணிக்கு, நகராண்மைக் கழகச் சிறுவர்பள்ளியில் திரு.வி.க. படத்திறப்பு விழா நடைபெறும். தோழர் கோதண்டராமன் தலைமையில், அறிஞர் கா. அப்பாத்துரை அவர்கள் திரு. வி. கல்யாணசுந்தரனாரின் படத்தைத் திறந்து வைப்பார்கள். தோழர் கிருட்டினன் பி. ஏ; எம். லி; அவர்கள் 'சிலப்பதிகாரம்' என்னும் பொருள் பற்றி சொற்பொழி வாற்றுவார்கள்.

* * *

சென்னை:—குளை, மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் 27—11—49 ஞாயிறு காலை 10 மணிக்கு. அரசினர் கலைக்கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் தோழர் ச. தங்கவேலனார். பி. ஓ. எல். (ஆனர்ஸ்) திருக்குறளில் "புறங்கூறாமை" என்பதைப் பற்றி விரிவுரையாற்றுவார். இடம் :—குளை வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளி.

* * *

மத்தூர்:— இவ்வூர் திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம், 27—11—49-ல் திராவிடன் நிலையத்தில் நடைபெறும். எனத் தோழர் ம. ர. செல்வராசன் அறிவிக்கிறார்.

* * *

அம்பலூர் (வாணியம்பாடி)— இவ்வூர் பாலாற்றில் 27—11—49 ஞாயிறு மாலை 5 மணிக்கு தோழர் வி. என். தந்தப்பன் தலைமையில், தாலுகா விவசாயிகள்சங்க அமைப்புக்கூட்டம் நடைபெறும். பலர் பேசுவர். இத்தாலுகாவிவசாயிகளனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

27—11—49

இராமநாதபுரம் (கோவை) :—	இரா. நெடுஞ்செழியன், எஸ். அப்பாவு, பி. பழனிச்சாமி என். இ. பாலகுரு.
திருச்சி :—	(காலை) க. அன்பழகன், ம. கே. சீனிவாசன், ஜி. பராங்குசம்
நீடாமங்கலம் :—	(மாலை) டி. கே. சீனிவாசன், கே. ஏ. நீலமேகம், மு. கருணாநிதி
திண்டுக்கல் :—	என். வி. நடராசன், என். முத்து.
திமிரி :—	சி. பி. சிற்றரசு.
பொட்டல்புதூர் :—	கே. வி. கே. சாமி.
வேலூர் :—	கே. ஏ. மதியழகன். (தி. மா. மு. கழகக் கூட்டம்)
மானாமதி :—	சி. என். அண்ணாத்துரை.
சோழவந்தான் :—	ஈ. வெ. கி. சம்பத், எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

29—11—49.

ஓரகாட்பேட்டை :—	இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. மணிமொழியார், எம். சின்னையா.

ஆசிரியருக்கு முடங்கல்

நல்லது செய்ய நாட்டங்கொள்ளாரா?

ஐயா,

நாங்கள் இரவு பகலாக உழைத்து உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி குந்த குடிசையின்றி வாழ்ந்தோம். வாழ்ந்து வருகிறோம். நமது சுதந்திர ஆட்சிவரை. எதோ சுதந்திரமாம். சுகவாழ்வு வருமாம் கல்வி வசதி முதல், மருத்துவ வசதிவரை இருக்கும் என்று, மஞ்சள் பெட்டிக் காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள். சொல்லிக்கொண்டும் வருகிறார்கள்.

உதாரணம் பாருங்கள். எங்கள் வாணியம்பாடி பிர்க்காவில், 72 கிராமங்கள் உள்ளன. இவைகளில், 20 கிராமத்திற்கு ஓர் உயர்தரபாடசாலையும், ஓர் வைத்யசாலையும் ஏற்படுத்துவதாகப் பத்திரிகைகளுக்கும், தினசரி, விடுதலை, பாரத தேவி, மாலை மணி இவைகளிலும் வெளியாயுள்ளது. எங்கள் சட்டசபைப் பிரதிநிதி திரு பொன்னுசாமி கவுண்டரிடம் நேரில் கிராமவாசிகள் பன்முறை சொல்லியும், ஒன்றும் பலன் இல்லை. இங்க அடிக்கடி மூன்றுமூன்றுகளாக எடுத்து சொன்னதின் பலனாக 6 மாதத்திற்கு முன் அம்பலூரில் ஓர் மத்தியதர பாடசாலை நடத்த கட்டிடம் இருக்கிறதா என்று வட ஆர்க்காடு ஜில்லா போர்டார் கேட்டார்கள் கிராமப்பொதுஜனங்களை முன்னேற்ற மடையச் செய்யும்கள் என்று தெரிவித்தோம். இதுவரை ஓர் பலனும் இல்லை. என்ன செய்வார்கள் பாபம், வடநாட்டு சர்க்காரின் வளர்ப்புப் பிள்ளைகள் நமது சர்க்கார் எதைசெய்தாலும் வடவர் கையை எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது போதாக் குறைக்கு வடநாட்டில் இருந்து அகதிகள் என்ற பேரால் சில குண்டர்கள் இங்கு குடியேறுகிறார்கள் அவர்களுக்கு வீட்டு வசதி, வியாபார வசதி கல்வி வசதி அவர்களுக்கு செய்யவேண்டும். இந்நாட்டு மக்கள் சிறகு தலையாரசோ இவர்களைப் பற்றி நமது சர்க்காருக்கு என்ன கவலை? ஆனால் சர்க்கார் இம்மாதிரி நாட்டின் சொந்தக்காரர்களின் வேண்டுகோளை கவனியாது விருந்தும் மாலை விழாவிலும் மதி இழந்து இருப்பார்களேயானால் நல்பயன் விளைக்காது. உடனடியாக எங்கள் வாணியம்பாடி பிர்க்காவில் உள்ள ஆலங்காயம் அம்பலூர் நாட்றம் பள்ளி. திம்மாம் பேட்டை இவைகளில் ஒவ்வொரு உயர்தர பாடசாலையும் வைத்தியசாலையும் ஏற்படுத்த மன்றாடுகிறேன் ஏற்பாடு செய்வார்களா?

இங்ஙனம்,
வி. என். தந்தப்பன்,
வடக்கப்பட்டு (வ. ஆ.)

கிளைக் கழகங்களுக்கு

சில மாவட்டங்களிலிருந்து கிளைக் கழகத் தோழர்கள் உறுப்பினர்சேர்க்கும் புத்தகங்களுக்கு நேரடியாகத் தலைமை நிலையத்துக்கு கடிதங்கள் எழுதுகின்றனர். கிளைக் கழகங்களுக்கு நேரிடையாகத் தலைமை நிலையத்திலிருந்து உறுப்பினர் சேர்க்கும் புத்தகங்கள் அனுப்பப்படமாட்டாது.

கோவை, தென் ஆர்காடு மாவட்டங்களிலுள்ள கிளைக் கழகங்கள், அந்தந்த மாவட்டச் செயலாளருக்கும், மற்ற மாவட்டங்களில் அந்தந்த அமைப்பாளர்களுக்கும் எழுதி உறுப்பினர் சேர்க்கும் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டுகிறேன்.

என். வி. நடராசன்,
செயலாளர்,
அமைப்புக்குழு,
தி. மு. க.(தலைமை நிலையம்

வெளிவருகிறது!

"புராக்ரஸ்"

திராவிடர் ஆங்கில வார வெளியீடு

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.,

தனிப் பிரதி அணா 1. — வருடசந்தா ரூ. 3

முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

விவரங்கட்கு:—

"மாலை மணி" பதிப்பகம்,

சென்னை—1.

வேண்டாம் வெளியில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்தி இன்ன பிற வற்றுக்குக் கட்டுப்படாத நிலையில் சென்னை சர்க்கார் இருப்பின், அவர்களும் இதனை மனதார மறுக்கமுடியாது. இந்நாட்டில் இடையில் புகுந்த வர்ணாஸ்ரமக்கோட்பாடே, தன் மதிப்பும் தன்னம்பிக்கையும் கொண்டு விளங்கிய மக்களை, மரக்கட்டைகளாக்கிற்றென்பதை வரலாறு தெரிந்தோர் நன்குணர்வர்.

தென்னாட்டு மக்களை அடிமைப்படுத்திக் கொள்வதற்கான ஆயுதமாகவே வர்ணாஸ்ரமக் கோட்பாடு இங்கு பிரயோகிக்கப்பட்ட தென்பதை யாரே மறுக்கவல்லார்? ஜாதி ஒழிப்பில் அக்கரைக்கொண்டிருப்பதாகக்கூறிக்கொள்ளும் இன்றைய சர்க்கார் இத்தகைய வர்ணாஸ்ரமக் கொடுமையை விரட்டும் பணியில், காதொடிந்த ஊசி முனையளவாவது ஈடுபட்டிருக்குமாவென்கேட்கிறோம். தனக்கு வாய்ப்போ—வசதியோ, மனமோ— மார்க்கமோ இல்லாவிடினும், இத்துறையில் ஈடுபட்டுப்பாடுபட்டு வருவோரையாவது கடைக்கண் காட்டியேனும் ஊக்குவித்திருக்குமா வெனக் கேட்கிறோம். அதுவே வேண்டாம், இன்று மந்திரியார் கூறுகிறரே ஜாதிவேறுபாடுகளகற்றும் பணியிலீடுபடுவோரின் ஊக்கம் தளரும்வகையில் சர்க்கார் நடந்து கொள்ளாது என்று; அந்த 'மதிற்மேற்பூனை'க் கொள்கையையாவது அனுசரித்திருக்குமா சர்க்காரென்று அறைகூவி யழைக்கிறோம்.

தென்னாட்டுப் பெருங்குடி மக்கள் சமுதாயத்துறையில சூத்திரராய், பஞ்சமராய், சண்டாளராய், வைப்பாட்டி மக்களாய்க் கருதப்படும் நிலை மாறி, சமத்துவம்—சகோதரத்வம் நிலைபெற வேண்டுமென்ற ஒரே கொள்கையைக்கூறி, அரசியல் லாபம் எதனையும், எந்த அளவிலும் எதிர்பாராது கடந்த முப்பதாண்டுகளாக லட்சியத் தொண்டாற்றி வருகிற தனியான இயக்கமொன்று, அதனைத் தமது சகோதர—தோழமை இயக்கமென்று கருதாவிட்டாலும், பகைமை இயக்கமென்றுவது கருதாதிருக்கிறார்களா ஆட்சியாளர்கள் என்று கேட்கிறோம். வீணுக வார்த்தைகளைக் கொட்டிப் பூசி மெழுகிய சமர்ப்பத்தினின்றும் சமாளித்துக் கொள்ள முயல்வது பொறுப்புள்ள நிலையினர்க்குத் தகுந்ததன்று.

திணைத்துணையும்பொருந்தாது.

மனு தர்மத்துக்கு மாருகப் போக மக்களுக்கு உரிமை யுண்டென்று மந்திரியார் கூறினார். மனு தர்மமும் அதன் 'பிரயோக கர்த்தாக்களும்' இந் நாட்டில் விதைத்த அநீதிகளும் எந்த அளவுக்குச் சீர்கேட்டை யேற்படுத்திவிட்டன இங்கு என்பதை எடுத்துக் காட்டும் எண்ணற்ற நூல்கள், கணக்கற்ற பேச்சுகள், பற்பல நாடகங்கள், அளவிறந்த பத்திரிகைகள் தோன்றின-தோன்றிக்கொண்டிருக்கின்றன. அவை சர்க்காரின் ஆதரவையோ, ஒத்துழைப்பையோ எதிர்பார்க்கவில்லை. தங்கள் முயற்சியில், பொதுமக்களின் பேராதரவில் நடந்துகொண்டிருக்கின்றன. சர்க்கார் அவற்றுக்கு ஆதரவு நல்காவிடினும், அவற்றின்மீது அடக்குமுறைச் சட்டங்களையாவது பாய்ச்சாதிருந்தனரா வென்று கேட்கிறான் இன்றைய சாதாரண மனிதன். 'இலட்சிய வரலாறு', 'ஆரிய மாயை', 'இராவண காவியம்', 'வர்ணாஸ்ரமம்', 'அறப்போர்', 'கருஞ்சட்டை ஒழியவேண்டுமா?' இன்னபிற எண்ணிறந்த நூல்கள் ஜாதிமுறையைச் சாடுவதுதவிர, வேறென்ன புரட்சிக் கருத்தைத்தாங்கிநிற்கின்றன? அவற்றின்மீது நடவடிக்கை எடுத்தனரே சர்க்கார், அதன் தத்துவமென்ன? இரணியன்-அல்லது இணையற்ற வீரன்' 'போர்வாள்', 'தூக்கு மேடை', 'மகாத்மா தொண்டன்' போன்ற நாடகங்களின் மீது பயந்ததின் நோக்கமென்ன? 'விடுதலைக்கும்', 'திராவிடநாடு'க்கும், 'குடியரசு'க்கும், 'மாலைமணி' அச்சகத்துக்கும் ஜாமீன் தொகை கோரிக்கை விடுத்ததின் அந்தரங்கமென்ன?

இவைதான் சர்க்காரின் ஜாதியொழிப்பு நடவடிக்கை போலும்! வேண்டாம்; வெளியில் சொல்லாதீர்கள், வெட்கக்கேடு!

நைஸாம் பிரகடனம்

'இந்திய யூனியனோடு சமஸ்தானம் இணையும் அதிகாரப் பத்திரத்தில்' ஐதராபாத் நைஸாம் கையெழுத்திட்டுவிட்டாராம். நவ 24-ம் தேதியன்று உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. இந்திய அரசியல் நிர்ணயசபை ஏற்படுத்தி செய்திருக்கும் புதிய அரசியல் ஐதராபாத்துக்கும் பொருந்துமெனப் பிரகடனமொன்று விடுத்துள்ளார்.

நாட்டு நடப்பு

பரிசளிப்பு விழா

திருவெறும்பூர், நவ 21—

இவ்வூர் முக்குலத்தோர் உயர்நிலைப் பள்ளிப் பரிசளிப்பு விழா 19-11-49 மாலை 3 மணிக்கு மாவட்டக் கழகத் தலைவர் தோழர் ராஜா சிதம்பரம் தலைமையில் நடந்தேறியது. செயலாளர் தோழர் என். பி. மாணிக்கம் வரவேற்பு கூறினர். ஜி. போ. ஆசிரியர்கள் சார்பில் தோழர் டி. காசிநாதன் வாழ்த்து கூறினர். கல்வி முன்னேற்றம் பற்றி தலைவர் நீண்ட சொற்பொழி வாற்றினர். துணைத் தலைவர் தோழர் எம். மாணிக்கசுந்தரனார் 325 பரிசுகளும் (100 பெரிய மகாத்மா படங்கள் உட்பட) வழங்கினர். தேநீர் விருந்தும் புகைப்பட எடுப்பும் நடந்தபின், நன்றி கூறப்பெற்று விழா இனிதே முடிவுற்றது. (ஒ-சி)

திருவள்ளுவர் கழகத்திறப்புவிழா

திருவெறும்பூர், நவ. 21—

இவ்வூர் முக்குலத்தோர் பாடசாலைக்கட்டடத்தில் 19-11-49 அன்று மாலை 5 மணிக்கு, இராமனாதபுரம் மாவட்ட நாட்டாண்மைக் கழகத் தலைவர் தோழர் எஸ். ஒ. எஸ். பி உடையப்பா அவர்கள் தலைமையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களால் திருவெறும்பூர் திருவள்ளுவர் கழகம் திறந்து வைக்கப்பெற்றது.

குடந்தை தோழர் எஸ்.கே. சாமி அவர்கள் ஓர் சொற்பொழிவு ஆற்றினர்கள் பல அறிஞர்களும் கலந்து கொண்டனர்.

செயலாளர் தோழர் என். பி. மாணிக்கம் யாவருக்கும் நன்றி கூறினர். (ஒ-சி)

ஆதித்திராவிடர் வாலிபர் சங்கம்

சின்னாளபட்டி... நவ 23

இவ்வூர் ஆதித்திராவிட வாலிபர் சங்கத்தின் புத்தாண்டு செயற்குழு தேர்தல் கூட்டம் 18-11-49 தோழர் கே. அம்மாவையப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:— சி.கந்தசாமி, துணைத் தலைவர்: எஸ். கோபால், செயலாளர்:—எஸ். பி. பழனிச்சாமி, துணைச்செயலாளர்:— எஸ். வ. வெங்கடேசன், நிதிக்காப்பாளர்:- பி. பொன்னுசாமி, பெருள் காவலர்:- எ. எஸ், கே. கிருஷ்ணன் மற்றும் ஒன்பது செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழாசிரியர்களுக்குப் பிரதமர் பேட்டி

சென்னை, நவ. 23—

தமிழாசிரியர் கழகச்சார்பில் தலைவர் மயிலை சிவமுத்து அவர்களுடன் சென்ற எழுவர் அடங்கிய குழுவிற்கு 23—11—49 காலை 9 மணிக்கு சென்னைப் பிரதமர் பேட்டி அளித்தார். பிரதமரிடம் தமிழாசிரியர்களின் சம்பளத்தைப் பற்றியும், தமிழ்நாட்டெல்லைப்போறுத்தவரையில் தமிழ் மொழிக்குரிய இடத்தில் வேறுஎந்த மொழியையும் வைக்கலாகாது என்பதுபற்றியும், அரசியலார் கல்வி சம்பந்தமாக அவ்வப்போது அமைக்கும் சிறப்பு அங்கத்தினர் குழுவில் தமிழ் அறிஞர் ஒருவரை சேர்த்துக்கொள்ள வேண்டுவது அவசியம் என்பது பற்றியும், திருக்குறள் எல்லா வகுப்புகளிலும் கட்டாயப் பாடமாக இருக்க அரசியலார் ஆவன செய்ய வேண்டும் என்பது பற்றியும் பேசினர்.

பிரதமர் பொறுமையோடு மகிழ்ச்சியோடும் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு ஆவன செய்வதாக கூறினர். (ஒ-சி)

தமிழர் நூல் நிலையம்

(மு.தா., மோறப்பட்டி, நவ 22—

20-11-49 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணி அளவில் மு தா. மோறப்பட்டி பொது இல்லத்தில் "தமிழர் நூல் நிலையம்" எனஒன்று துவக்கப்பட்டு செயற்குழுவொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர்:- நா. இராமலிங்கம்; துணைத் தலைவ:-பெ. அ. இராசு; செயலாளர்:- வெ. சீனிவாசன்; உதவி செயலாளர்:-அ. சீனிவாசன்; பொருள்காப்பாளர்: வீ. முத்துவீரன்; விளம்பர உறுப்பினர்:-மோ. க. காசி; புத்தகப் பொறுப்பாளர்:-ல. ரா. வரதராசன் மற்றும் 14 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மறுமலர்ச்சி மன்றம்

தாராபுரம், நவ 22 —

தாராபுரம்—உப்புத்துறைப் பாளையம் மறுமலர்ச்சி மன்ற அங்கத்தினர்கள் கூட்டம் 19-11-49 சனி மாலை $9\frac{1}{2}$ மணிக்கு தோழர் சண்முகனார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது மன்றம் நான்காவது ஆண்டு நிறைவு விழாவை டிசம்பர் திங்கள் இறுதியில் தோழர் அண்ணாத்துரை அவர்களைக் கொண்டு சிறப்பாகக் கொண்டாடுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறின.

மாணவர் சொற்போர் மன்றம்

பூளைமேடு நவ. 23—

பூளைமேடு தி. மா. மு. கழகத்தின்சார்பில் 18-11-49 மாலை 5 மணி அளவில் 'மாணவர் சொற்போர் மன்றத்' திறப்புவிழா நடத்தப்பட்டது. விழாவிற்கு, தோழர் பி. ஆர். பழனிச்சாமி தலைமை வகித்தார். கூட்டம் முகக்கொட்டகையிலேயே நடந்தபோதிலும் பொது மக்களும் தொழிலாளர்களும் ஏராளமாக வந்திருந்தனர். பல மாணவத் தோழர்கள் பேசினர். தி. மா. மு.க. செயலாளர் தோழர் அப்பாதுரை நீண்டதோர் சொற்பொழிவாற்றி பின் வந்திருந்தோருக்கு நன்றி கூறினர். விழா இரவு 8 மணி அளவில் இனிதுமுடி வெய்தியது.

மின்சாரம் தேசீய மயமாகும்

மாகாணத்தில் மின்சார சக்தி சப்ளை செய்யும் தனிப்பட்டோரின் நிர்வாகத்திலுள்ள ஸ்தாபனங்களை, சர்க்கார் கைப்பற்றுவதற்கான மசோதாவொன்றை மராமத்து இலாகா மந்திரி தோழர் எம். பக்தவத்சலம் 24-ந் தேதியன்று சட்டசபையில் கொண்டு வந்தார். விவாதத்துக்கு பிறகு, மசோதா பொறுக்குக் கமிட்டியொன்றின் ஆலோசனைக்கு விடப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்

இதுவரையில் தழைத்துள்ள கிளைகள்

331

பொழுது போக்கு

தமிழ் — நாடகம்

ஒற்றைவாடை — இலயத்தில் ராம்

தமிழ்—சினிமா

பிரபாத்	— அபூர்வ சகோதரர்கள்
வெல்லிங்டன்	— "
மகாராணி	— அரிதாஸ்
சரஸ்வதி	— சக்ரதாரி
சன்	— மாயக் குதிரை
பாரகன்	— லைலா—மஜ்னு
கபாலி	— போஜன்

தெலுங்கு

கிரௌன்	— லைலா—மஜ்னு

ஆங்கிலம்

Casino	— Home of the Brave
New Elphinstone	— House of Strangers
New Globe	— See you on Flamingo Road
Midland	— Forever Amber
Minerva	— The Sea Hawk
Roxy	—Adventures of Casanova
Sayani	— Zorro Rides Ggain

இந்தி

சாகர்	— சோட்டா பாய்
செயிட்டி	— லாட்லி
செலக்ட்	— சம்-சரவோ

சந்தாதாரர்களுக்கு

தாங்கள் எழுதும் கடிதங்களில் அனுப்பும் மணியார்டர்களில் தங்கள் சந்தா நம்பரைக் குறித்து எழுதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாதியற்றுக்கிடக்கும் ஏழை மக்களுக்கும்
கேட்பாரற்றுக்கிடக்கும் பாட்டாளி மக்களுக்கும்
பரிந்து பேசும் ஒரே நூல்!

"ஏழையின் அரசியல்"

(எஸ் சதாசிவம்)

விலை அணா எட்டு

தபாலில் பெற 9 அணா ஸ்டாம்பு அனுப்புக.
விற்பனையாளர்க்கு 25 % கழிவு.

இன்பவாழ்வுப் பதிப்பகம், ஆர். எஸ். புரம் P.O கோயமுத்தூர்

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street Madras-1